நாள் : 09.03.2022
அ.வ.எண் :17/2019
வா.சா.2 : பாலமுருகன்

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கு விபரம் எனக்கு தெரியும். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி வழக்கு பிரதிவாதியிடம் இடம் வாங்கியுள்ளார். வாதி கிரையம் வாங்கிய பிறகும் 2,3 பிரதிவாதிகள் தாவா சொத்திலிருந்து வெளியேற மறுத்து வருவதால் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1 செண்ட். தாவா சொத்தி மண் மதில் வீடு உள்ளது. தாவா வீட்டில் 2,3 பிரதிவாதிகள் மட்டுமே குடியிருந்து வருகின்றனர். 1ம் பிரதிவாதி தாவா வீட்டில் குடியிருக்கவில்லை. 1ம் பிரதிவாதி வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர் என்றும் 1ம் பிரதிவாதியை பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)

ஒம்/−சி.ராஜேஷ்,
மாவட்ட உரிமையில் நீதிபதி,
ஆண்டிபட்டி.